# யூலை – 30 – செவ்வாய்

புனித பீற்றர் கிறிசலோகு - ஆயர் - மறை வல்லுனர்

அவர் எப்பொழுதும் கடிந்து கொள்பவரல்லர். திபா. 103:9

------------------------------------------------------------

## முதல் வாசகம்: விடுதலைப் பயணம்33:7-11,34:5–9, 28

மோசே பாளையத்துக்கு வெளியே கூடாரத்தைத் தூக்கிச் செல்வதும் பாளையத்திற்கு வெகுதூரத்தில் கூடாரம் அடிப்பதும் வழக்கம். அதற்கு அவர் சந்திப்புக்கூடாரம் என்றுபெயரிட்டார். ஆண்டவரைத்தேடும் யாவரும் பாளையத்துக்கு வெளியேயுள்ள சந்திப்புக்கூடாரத்திற்குச் செல்வர். மோசே கூடாரத்துக்குச் செல்லும் போதெல்லாம் மக்கள் அனைவரும் அவரவர் கூடார நுழைவாயிலில் எழுந்துநின்றுகொண்டு, அவர் கூடாரத்தில் நுழையும்வரை அவரைப் பார்த்துக்கொண்டேயிருப்பர். மோசே கூடாரத்தில் நுழைந்ததும், மேகத்தூண் இறங்கி வந்து கூடார நுழைவாயிலில் நின்றுகொள்ளும். அப்போது கடவுள் மோசேயிடம் பேசுவார். கூடார நுழைவாயிலில் மேகத்தூண் நின்றுகொண்டிருப்பதை மக்கள் அனைவரும் காண்பர். அப்போது அவரவர் கூடார நுழைவாயிலில் நின்றுகொண்டே மக்கள் அனைவரும் வணங்கித்தொழுவர். ஒருவன் தன்நண்பனிடம் பேசுவது போலவே ஆண்டவரும் முகமுகமாய் மோசேயிடம் பேசுவார். பின்னர் மோசே பாளையத்துக்குத் திரும்புவார். இளைஞனும் நூனின் மகனுமான யோசுவா என்ற அவருடைய உதவியாளர் கூடாரத்தை விட்டகலாமல் இருப்பார். ஆண்டவர் மேகத்தில் இறங்கிவந்து, அங்கே அவர்பக்கமாய் நின்றுகொண்டு, ”ஆண்டவர்” என்றபெயரை அறிவித்தார். அப்போது ஆண்டவர் அவர்முன்னிலையில் கடந்து செல்கையில், ”ஆண்டவர்! ஆண்டவர்! இரக்கமும் பரிவும் உள்ள இறைவன் சினம்கொள்ளத் தயங்குபவர் பேரன்புமிக்கவர் நம்பிக்கைக்குரியவர். ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்புசெய்பவர் கொடுமையையும் குற்றத்தையும் பாவத்தையும் மன்னிப்பவர் ஆயினும், தண்டனைக்குத் தப்பவிடாமல் தந்தையரின் கொடுமையைப் பிள்ளைகள் மேலும் பிள்ளைகளின் பிள்ளைகள் மேலும், மூன்றாம் நான்காம் தலைமுறைவரை தண்டித்துத் தீர்ப்பவர்” என அறிவித்தார். உடனே மோசே விரைந்து தரைமட்டும் தாழ்ந்து வணங்கி, ”என் தலைவரே! நான் உண்மையிலேயே உம் பார்வையில் தயைபெற்றவன் என்றால், இவர்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள் எனினும், என்தலைவரே! நீர் எங்களோடு வந்தருளும். எங்கள் கொடுமையையும் எங்கள்பாவத்தையும் மன்னித்து எங்களை உம் உரிமைச் சொத்தாக்கிக்கொள்ளும்” என்றார். அவர் அங்கே நாற்பதுபகலும் நாற்பது இரவும் ஆண்டவருடன் இருந்தார். அப்போது அவர் அப்பம் உண்ணவும் இல்லை. தண்ணீர் பருகவும் இல்லை. உடன்படிக்கையின் வார்த்தைகளான பத்துக் கட்டளைகளை அவர் பலகையின் மேல் எழுதினார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும், அருளும் கொண்டவர்.

## நற்செய்தி : மத்தேயு 13 : 36 - 43

அக்காலத்தில், இயேசு மக்கள் கூட்டத்தினரை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தார். அப்போது அவருடைய சீடர்கள் அவரருகே வந்து, ”வயலில்தோன்றிய களைகள்பற்றிய உவமையை எங்களுக்கு விளக்கிக்கூறும்” என்றனர். அதற்கு அவர் பின்வருமாறு கூறினார் ”நல்ல விதைகளை விதைப்பவர் மானிடமகன். வயல், இவ்வுலகம் நல்லவிதைகள், கடவுளின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் களைகள், தீயோனைச் சேர்ந்தவர்கள். அவற்றை விதைக்கும் பகைவன், அலகை. அறுவடை, உலகின்முடிவு. அறுவடை செய்வோர், வானதூதர். எவ்வாறு களைகளைப் பறித்துத் தீக்கிரை யாக்குவார்களோ அவ்வாறே உலகமுடிவிலும் நடக்கும். மானிடமகன் தம் வானதூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய ஆட்சிக்குத் தடையாக உள்ள அனைவரையும் நெறிகெட்டோரையும் ஒன்றுசேர்ப்பார்கள். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவார்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும். அப்போது நேர்மையாளர் தம்தந்தையின் ஆட்சியில் கதிரவனைப்போல் ஒளிவீசுவர் கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்” என்றார்.

**தியானம் :** இன்றைய இறைவார்த்தைத் தியானங்கள் எம்மை நாமே கேள்விகளைக் கேட்டு சிந்தித்து வாழ அழைக்கின்றது. இறைவன் உலகைப் படைத்து யாவற்றையம் உரிமையாக்கி ஆண்டு வழிநடத்தும்படி கூறினார். ஆனால் மனிதனோ ஆரம்பத்திலே அலகையின் சோதனையினால் இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழாமல் பாவம் என்னும் படுகுழிக்குள் விழுந்து விடுகின்றான். இதன் நிமித்தம் பாவமானது தொடந்த வண்ணமாகவே இருக்கின்றது. இவ்வாறு தொடர்ந்து பாவவாழ்வு வாழ்ந்து வந்தோமேயானால் அழிவு நிற்சயம். மனமாறுவோமானால் கிடைப்பது மீட்பு. அன்று இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்கு எதிராக செயற்பட்டதால் அவர்களை அழிக்கத் திட்டமிட்டார். இருப்பினும் மோசே அவர்களுக்காக மன்றாடி அவர்களுக்கு விடுதலை அழித்தார். இவற்றின் மூலம் தனது செயல்களை இஸ்ராயேல் மக்கள் காணும்படி செய்தார். நற்செய்தி வாசகத்திலும் நாங்கள் எவ்வாறு வாழ முடியும் என்பதை உவமை மூலமாக எமக்கு வெளிப்படுத்துகின்றார். நல்ல நிலத்தில் விதைகளை விதைக்கும் பொழுது நல்ல கதிர்கள் வளரும் ஆனால் இடையிடையே களைகளும் வளரும். ஆனல் அறுவடையின் நேரத்தில் அறுவடை செய்வோர் களைகளை அரித்து நெருப்பிலே போட்டு சுட்டெரிப்பார். அதேபோன்றுதான் இறைவனும் இறைவார்த்தைகளை எமக்கு கொடுத்திருக்கிறார், ஆனால் நல்ல முறையில் பயன்படுத்தி பலன் கொடுக்கும் பயிர்களாக அல்லாமல் களைகள் போன்று எமது வாழ்வில் சிற்றின்ப ஆசைகள். வெளிவேடமான வாழ்க்கை, உலக காரியங்களுக்குரிய போக்கு, இவ்வாறாக அலகைக்குரிய வாழ்க்கை வாழ்ந்து வந்தோமேயானால் இறுதிக்கால முடிவில் இறைவனின் வருகையின் போது களைகள் போன்று நாங்களும் பிரித்தெடுத்து பாதாளத்தினுள் தள்ளப்படுவோம். எனவே நாங்கள் பழைய வாழ்க்கையிலிருந்து விடுபட்டு இறைவனுக்கு ஏற்ற தூயவாழ்வு வாழ்ந்து பலன் கொடுக்கும் நல்ல விதைகளாக எம்மை மாற்றிக் கொள்வோம்.